RNI-NO: TNTAM/2021/83936




Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 194 ஜுலை.20 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# மக்கள்தொகை சுய கணக்கெடுப்பை ஆன்லைனில் மேற்கொள்வது எப்படி?

சென்னை, ஜுலை.20-

தமிழ்நாட்டில் மக்கள்தொகை சுய கணக்கெடுப்பின் பணிகள் நேற்று முதல் தொடங்கப்பட்ட நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் விஜய், அவரின் விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்து, பொதுமக்களையும் தங்களின் தரவுகளை பதிவு செய்யுமாறு ஊக்குவித்துள்ளார்.

மாநிலத்தின் எதிர்கால வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த முக்கிய பங்கு வகிக்கும் மக்கள்தொகை கணக்கெடுப்பில், ஒவ்வொரு குடும்பமும் உண்மையான தகவல்களை கொடுத்து, அதை வெற்றிகரமாக செய்து முடிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டில் மக்கள்தொகை சுய கணக்கெடுப்பு நேற்று தொடங்கியது. பொதுமக்கள் தங்களின் விவரங்களை இணையதளம் மூலமாக சுயமாக பதிவு செய்ய ஜுலை 31ம் தேதி வரை கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில், மக்கள் தொகை கணக்கெடுப்பு என்றால் என்ன? அதனை இணையதளம் வழியாக எப்படி மேற்கொள்ள வேண்டும்? அதில் என்ன மாதிரியான கேள்விகள் கேட்கப்படும்? ஒவ்வொரு குடும்பமும் தர வேண்டிய தரவுகள் என்னென்ன? அப்படி வழங்கப்படும் தரவுகள் எப்படி பயன்படுத்தப்படும்? இதனால் பொதுமக்களுக்கான நன்மைகள் என்ன? என்பன உள்ளிட்ட தகவல்களை இந்த பதிவில் முழுமையாக அறிந்துகொள்ளலாம்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு என்றால் என்ன?

பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் வாழும் பல்வேறு விதமான பின்னணி கொண்ட மக்களின் சமூக, பொருளாதார மற்றும் தற்கால வாழ்வியல் நிலை குறித்து துல்லியமாக அறிந்துகொள்ள மக்கள்தொகை கணக்கெடுப்பு முக்கியமானதாக உள்ளது.

நாட்டின் வளர்ச்சிக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பை உருவாக்கவும், மக்களுக்கு தேவையான ஆக்கப்பூர்வமான திட்டங்களை வகுக்கவும், அவர்களின் வாழ்வியல் தரத்தை உயர்த்தி, ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைய செய்யவும் இந்த தரவுகள் இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

சென்சஸ் சட்டம் 1948, சென்சஸ் விதிமுறை 1990 ஆகியவற்றின் அடிப்படையில் உள்துறையின் கீழ் பதிவாளர் ஜெனரல் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகத்தின் மூலம் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.



இந்தியாவில் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது 1872 ம் ஆண்டே நடைபெற்ற போதிலும், முறையான கணக்கெடுப்பு என்பது 1881 முதல் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. கொரோனா பாதிப்பு காரணத்தினால், 2011ம் ஆண்டுக்கு பின்னர் கணக்கெடுப்பு நடைபெறவில்லை.

தற்போது, 15 வருடங்களுக்கு பின்னர் 2027ம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் நாடு முழுவதும் தொடங்கப்பட்டுள்ளது.

2 கட்டமாக நடத்தப்படும் கணக்கெடுப்பு

வீட்டுப் பட்டியல், வீட்டுவசதிக் கணக்கெடுப்பு மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு என 2 கட்டமாக கணக்கெடுப்பு பணிகள் நடைபெறுகிறது. முதல்கட்டமாக வீட்டுப் பட்டியல், வீட்டுவசதிக் கணக்கெடுப்பில் வீட்டின் விவரங்கள், அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை, மின்சாரம் ஆகியவை, எரிப்பொருள், இணையம், வீட்டில் இருக்கும் எலெக்ட்ரானிக்ஸ் பொருட்கள், வாகனங்கள் உள்ளிட்ட தகவல்கள் சேகரிக்கப்படும்.

இரண்டாம் கட்டமாக, மக்களின் எண்ணிக்கையை கணக்கெடுக்கும் விதமாக, குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் விவரங்கள், மதம், சமூகம், கல்வி, மொழி, வேலை, தொழில், மருத்துவ நிலை உள்ளிட்ட தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன.

இந்நிலையில், தமிழ்நாட்டில் முதற்கட்டமாக வீட்டுப் பட்டியல், வீட்டுவசதிக் கணக்கெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது.

இணைய வழியில் சுய கணக்கெடுப்பு

வீட்டுப் பட்டியல், வீட்டுவசதிக் கணக்கெடுப்பு என்பது இரண்டு கட்டமாக நடத்தப்படுகிறது. முதலில் பொதுமக்களே தங்கள் வீட்டின் விவரங்களை அளிக்கும் வகையில் இணையதளம் வழியாக சுயமாக பதிவு செய்துகொள்ளலாம்.

அதன் பின்னர், வீடு வீடாக அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஒருவர் வந்து அந்த விவரங்களை சரிபார்த்து உறுதிப்படுத்துவர். மேலும், இணையதளத்தில் பதிவு செய்யாமல் விடுபட்டவர்களின் வீடுகளுக்கு அவர்கள் நேரடியாக சென்று பதிவு செய்து கணக்கெடுப்பை மேற்கொள்வார்கள்.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு வரலாற்றில் முதன்முறையாக, இணைய வழியில் பொதுமக்களே தங்களின் வீட்டு விவரங்களை பதிவு செய்யும் முறை இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப வசதியோடு மக்களே அளிக்கும் தரவுகள் மற்றும் அதிகாரிகளால் சேகரிக்கப்படும் தரவுகள் என இரண்டு முறை தரவுகள் சரிபார்க்கப்படுவதால், துல்லியமான தரவுகள் கிடைப்பதுடன், கணக்கெடுப்பு பணியும் வேகமடையும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைய வழியில் சுய கணக்கெடுப்பை மேற்கொள்ளுவது எப்படி?

சுய கணக்கெடுப்பை பொதுமக்கள் அவர்களின் வீட்டில் இருந்தப்படியே, இணைய வசதியுடன் மொபைல் போன் வழியாகவே மேற்கொள்ளலாம். ஒரு குடும்பத்தின் விவரங்களை அளிக்க ஒரு மொபைல் எண் கொண்டு ஒருமுறை பதிவு செய்து வழங்கினால் போதும்.

மத்திய அரசு வெளியிட்டுள்ள https://se.census.gov.in/ என்ற இணையதளத்தின் மூலம் பதிவு செய்து, வீடு மற்றும் வீட்டு உபயோகத்தை சார்ந்து கேட்கப்பட்டுள்ள 33 கேள்விகளுக்கு பதிலளித்து சமர்பிக்க வேண்டும்.

இணைய வழியில் மேற்கொள்ள படிப்படியான வழிமுறைகள்

படி 1: மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்திற்கு செல்லவும்.

படி 2: அதில் முகப்பு பக்கத்தில் தமிழ்நாடு மாநிலத்தைத் தேர்வு செய்து, திரையில் கொடுக்கப்பட்டுள்ள captcha உள்ளிட்டு லாங்கின் செய்யவும்.

படி 3: அதனைத்தொடர்ந்து, குடும்ப தலைவரின் பெயர், மொபைல் எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும். இதில் கொடுக்கப்படும் குடும்பத் தலைவர் பெயரை மாற்ற முடியாது. அதே போன்று, ஒரு குடும்பத்திற்கு பதிவு செய்யப்பட்ட மொபைல் எண் கொண்டு மற்றொரு குடும்பத்திற்கு பதிவு செய்ய முடியாது.

படி 4: தொடர்ந்து அதில் கொடுக்கப்பட்டுள்ள 16 மொழிகளில் உங்களுக்கு ஏதுவான மொழியை தேர்வு செய்து, மொபைல் எண்ணிற்கு அனுப்பப்பட்ட OTPயை பதிவு செய்யவும்.

படி 5: பின்னர் மாவட்டத்தைத் தேர்வு செய்து, தபால் எண், கிராமம்/நகரம் ஆகிய விவரங்களை அளிக்க வேண்டும். மேலும், அதில் அளிக்கப்பட்டுள்ள மேப் வசதியுடன் உங்கள் வீடு அமைந்திருக்கும் சரியான இடத்தை தேர்வு செய்ய வேண்டும்.

படி 6: தற்போது வீட்டை சார்ந்து கேட்கப்பட்டுள்ள 33 கேள்விகளுக்கு உண்மையான விவரங்களை அளிக்க வேண்டும்.

படி 7: அளித்த விவரங்களை சரிபார்த்து, தேவை இருப்பின் திருத்தம் மேற்கொண்டு பதிவு செய்து வைத்துகொள்ளலாம். அதில் எந்த மாற்றமும் இல்லை என்றால், இறுதி தேதிக்குள் Submit செய்ய வேண்டும்.

படி 8: விவரங்களை பதிவு செய்த பின்னர், சுய கணக்கெடுப்பு மேற்கொண்டதற்கான 11 இலக்கு எண் வழங்கப்படும். இந்த எண் பதிவு செய்த மொபைல் எண்ணிற்கும், மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பப்படும்.

படி 9: இந்த 11 இலக்கு எண்ணை, வீட்டிற்கு கணக்கெடுக்க வரும் நபரிடம் கொடுத்து தரவுகளை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும்.

எந்த மாதிரியான வீடு, வீட்டின் தளம், சுவர்கள் எதில் அமைக்கப்பட்டுள்ளது? எத்தனை அறைகள் உள்ளன? சொந்த வீடா, வாடகை வீடா, வாழும் தன்மையில் உள்ளதா? சேதமடைந்த வீடா, வீட்டில் எத்தனை பேர் வசிக்கிறார்கள்? அவர்களுக்கான குடிநீர் ஆதாயம் எது, மின் தேவையை எப்படி பூர்த்தி செய்கிறார்கள்?

எந்த விதமான கழிவறை உபயோகப்படுத்துகிறார்கள்? கழிவு நீர் வசதி செய்யப்பட்டுள்ளதா? குளிப்பதற்கு இட வசதி உள்ளதா? எரிப்பொருள் தேவையை எப்படி நிவர்த்தி செய்கிறார்கள்? வீட்டில் ரேடியோ, டிவி, இணையம், கணினி, மொபைல் போன், வாகனம் உள்ளதா? வீட்டின் பிரதானமான உணவு எது? உள்ளிட்ட விவரங்கள், 33 கேள்விகளின் மூலம் சேகரிக்கப்படுகிறது.

உண்மையான தரவுகளை அளிப்பது அவசியம்

சென்சஸ் சட்டம் 1948இன் படி, குடிமக்கள் உண்மையான தரவுகளை வழங்குவது கட்டாயமாகும். ஒருவேளை, பொய்யான விவரங்கள் அளிக்கப்பட்டது கண்டறியப்பட்டால், அவர்களுக்கு அபராதம் விதிக்க விதிமுறைகள் வழிவகுக்கிறது. அதே போன்று, அனைத்து குடிமக்களும் மக்கள்தொகை கணக்கெடுப்பில் பங்கேற்பது கட்டாயமாகும்.

இணைய வழி பதிவின் போதும், நேரடியாக கணக்கெடுப்பவர் வரும் போதும் அவர்களுக்கு எந்தவித ஆவணங்களையும் வழங்க வேண்டிய அவசியமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடு வீடாக தரவுகள் சரிபார்க்கப்படும்

இணைய வழியில் சுய கணக்கெடுப்பு கால அவகாசம் முடிந்த பின்னர், ஆகஸ்ட் 1 முதல் 30 வரை வீடு வீடாக நேரடியாக கணக்கெடுப்பு பணிகள் நடைபெறும். அப்போது, இணையதளத்தில் சுய கணக்கெடுப்பு மேற்கொண்டபோது, வழங்கப்பட்ட 12 இலக்க எண்ணை அவர்களிடம் வழங்க வேண்டும்.

இணையவழியில் கணக்கெடுப்பை மேற்கொள்ளவில்லை என்றாலும், கணக்கெடுக்க வரும் நபரிடம் விவரங்களை பதிவு செய்துகொள்ளலாம்.

பதிவு செய்த 12 இலக்கு எண்ணை தவறவிட்டவர்கள், வீட்டிற்கு கணக்கெடுக்க வரும் நபரின் உதவியுடன் எண்ணை கண்டறிந்து கணக்கெடுப்பை நிறைவு செய்யலாம்.

ஒரு வேளை, உங்கள் வீட்டிற்கு கணக்கெடுக்க யாரும் வரவில்லை என்றாலும், உங்கள் மாவட்ட கலெக்டர் அல்லது தாலுக்கா அலுவலகம் மூலம் உங்கள் பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நபர்களை தொடர்புகொண்டு கணக்கெடுப்பில் பங்கேற்கலாம்.

மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது அளிக்கப்படும் தரவுகள் அனைத்தும் பாதுக்காக்கப்படும். சென்சஸ் சட்டம் 1948 கீழ் தனிநபர்களின் விவரங்கள் யாருடனும் பகிரப்படாது.

மக்கள் தொகை கணக்கெடுப்பினால் ஏற்படும் நன்மைகள் என்னென்ன?

மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் துல்லியமான சமூக, பொருளாதார நிலையை அறிந்துகொள்ள முடியும். இந்த தரவுகளின் அடிப்படையில் சமூக வேறுபாடுகள், பொருளாதார நிலை கண்டிறியப்பட்டு, அதனை மேம்படுத்தும் நோக்கில் திட்டங்கள், கொள்கைகள் வகுக்கப்படும்.

புவி அமைப்பு, அந்த மக்களின் வாழ்வாதாரம், தொழில், கல்வி ஆகியவற்றை கண்டறிந்து புதிய தொழில் வாய்ப்புகள், கல்வி தேவைகள் ஆகியவற்றை உருவாக்க வழிவகை செய்யப்படும்.

குறிப்பாக மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையை மேற்கொள்ளப்பட்டு, சமமான ஜனநாயக உரிமையை நிலைநாட்ட முடியும்.

சாதி அடிப்படையிலான விவரங்கள் சேகரிக்கப்படுவதால், அனைவருக்கும் சமமான சமூகதாயத்தை உருவாக்க ஏதுவாக இடஒதுக்கீடு தேவைகள் ஆராயப்படும்.

அரசின் பொது சேவைகளான பள்ளி, மருத்துவமனை, போக்குவரத்து உள்ளிட்டவற்றை மேம்படுத்தவும், புதிதாக உருவாக்கவும் இத்தரவுகள் உதவும்.

இத்தரவுகளின் அடிப்படையில் வரும் காலங்களில் கவனம் செலுத்த வேண்டிய துறைகள் கண்டறியப்பட்டு, அதற்கான ஆய்வை மேற்கொள்ளவும் வித்திடப்படும்.

தனி மனித வளர்ச்சியை உறுதிப்படுத்துடன், ஒரு நாட்டின் ஒன்றிணைந்த வளர்ச்சியை அடைய இத்தரவுகள் முக்கியமானதாக கருதப்படுகிறது.

## த.வெ.க., ஆட்சியை கவிழ்க்க பேரம் பேசிய வழக்கு: கரூரில் நள்ளிரவில் அதிரடி சோதனை

கரூர், ஜுலை.20-

தவெக ஆட்சியை கவிழ்க்க எல்எல்ஏவிற்கு ரூ.25 கோடி வரை பேரம் பேசிய வழக்கில், கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் போலீஸார் நேற்று நள்ளிரவில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.




தவெக ஆட்சியை கவிழ்க்க எல்எல்ஏவிற்கு ரூ.25 கோடி வரை பேரம் பேசிய வழக்கில் திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பலரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட எல்.ஜி.பி நகரில் வசிக்கும் கனகராஜ் என்பவரது அலுவலகம் பாரி நகரில் உள்ளது. இந்த நிலையில், இவ்வழக்கு தொடர்பாக திருவல்லிக்கேணி காவல் நிலைய விசாரணை அதிகாரியின் உத்தரவின் பெயரில், கரூர் மாவட்டம் லாலாபேட்டை காவல் நிலைய ஆய்வாளர் மணிகண்டன் தலைமையிலான போலீஸார் அந்த அலுவலகத்தில் நேற்று நள்ளிரவில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

சுமார் 1 மணி நேர சோதனைக்குப் பிறகு எந்த ஆவணமும், பணமும் இல்லாததால் சிசிடிவியில் பதிவான காட்சிகள் மற்றும் கணக்குப் புத்தகங்களை போலீஸார் பறிமுதல் செய்து எடுத்துச் சென்றதுடன், அந்த அலுவலகத்திற்கு சீல் வைத்துச் சென்றுள்ளனர். மேலும், அங்கே பாதுகாப்பிற்காக 2 பெண் காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

குதிரை பேர பின்னணி: கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தவெக எம்எல்ஏ இளையராஜாவிடம் குதிரை பேரத்தில் ஈடுபட்டதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் நரேஷ், ரமேஷ், கார்த்திக், திருநாவுக்கரசு உட்பட 9 பேரை சென்னை திருவல்லிக்கேணி போலீஸார் கைது செய்துள்ளனர்.

திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது தம்பி அசோக்குமார் மீதும் இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு உயர் நீதிமன்றம் நிபந்தனை முன்ஜாமீன் வழங்கியுள்ளது.

இந்நிலையில், தவெக ஆட்சியை கவிழ்க்க எல்எல்ஏவிற்கு ரூ.25 கோடி வரை பேரம் பேசிய வழக்கில், கரூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் போலீஸார் நேற்று நள்ளிரவில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

## எல்நினோ பாதிப்பு காரணமாக உணவு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை : அமைச்சர் வெங்கடரமணன்

சென்னை, ஜுலை.20-

எல்நினோ பாதிப்பு காரணமாக உணவு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் வெங்கடரமணன் கூறியுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைந்துள்ள ஆதி திராவிடர் நலத்துறை மாணவியர் விடுதியில் தமிழ்நாடு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் வெங்கடரமணன் இன்று (ஜுலை 18) ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து மாணவிகளிடம் கலந்துரையாடி அவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இதனை அடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் வெங்கடரமணன், "மாணவ, மாணவிகள் தங்கும் விடுதிகளில் ஆய்வு மேற்கொண்டு அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தர முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். மேலும், தேவைப்படும் இடங்களில் சுத்தம் செய்து விளையாட்டு மைதானங்கள் ஏற்படுத்தவும்



நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "எல்நினோ காரணமாக பருவ கால மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆகையால், பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க, டெல்டா மாவட்டங்களில் கொள்முதல் செய்யப் படும் நெல்லை தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களில் உள்ள அரவை ஆலைகளில் அரைத்து அந்தந்த மாவட்டங்களில் பொதுமக்களுக்கு அரிசியாக விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேபோல், அரவை ஆலைகள் இல்லாத மாவட்டங்களில், அருகில் உள்ள மாவட்டங்களுக்கு நெல் மூட்டைகள் அனுப்பி வைக்கப்படும். கடந்த குறுவை மற்றும் சம்பா பருவங்களில் தேக்கமடைந்துள்ள நெல் மூட்டைகள் விரைவில் அரவைக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

இதையும் படிங்க: ஐஸ்கிரீமில் மது கலந்து விற்பனை செய்யப்பட்டதாக புகார்; ஆய்வுக்கு பிறகு கடைக்கு சீல் வைத்த அதிகாரிகள்

சேமிப்பு கிடங்குகள் பற்றாக்குறையை சமாளிக்க, ரயில்வே துறைக்கு சொந்தமான காலியிடங்களில் சேமிப்பு கிடங்குகள் அமைக்க ஒப்பந்தம் போடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் ரயில்வேக்கு சொந்தமான இடங்களில் தற்காலிக சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும்" என தெரிவித்தார்.

நேற்றைய தினம் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள எம்.சி.ராஜா சமூக நீதி விடுதியில் முதலமைச்சர் விஜய் முன்னறிவிப்பின்றி திடீர் ஆய்வு மேற்கொண்டார். அங்கு மாணவர்களிடம் குறைகளைக் கேட்டறிந்த அவர், அவற்றின் உடனடியாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். இந்த சூழலில் இன்று மயிலாடுதுறையில் உள்ள ஆதி திராவிடர் நலத்துறை மாணவியர் விடுதியில் அமைச்சர் வெங்கடரமணன் ஆய்வு மேற்கொண்டார். அமைச்சரின் இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் ஸ்ரீகாந்த் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# சென்னை மாநகராட்சியில் லஞ்சம் வாங்கிய 7 பேர் சஸ்பெண்ட்

சென்னை, ஜூலை.20–
மாநகராட்சியில் லஞ்சம் வாங்கிய 7 அலுவலர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். 3 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கரூர் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் விஜய், "அரசு அலுவலகங்களில் லஞ்சம் கேட்டால் கொடுக்காதீர்கள். என் பெயரை சொல்லுங்கள்" என அறிவித்தார். இதைத் தொடர்ந்து லஞ்ச ஒழிப்பு போலீஸார் தமிழகம் முழுவதும் அரசு அலுவலகங்களில் சோதனையை தீவிரப்படுத்தினர். பத்திரப் பதிவு, சாலை போக்குவரத்து அலுவலகங்கள், மாநகராட்சி அலுவலகங்களில் சோதனை நடத்தினர். அப்போது டிஜிட்டல் பரிவர்த்தனை மூலம் லஞ்சம் கைமாறியதை கண்டறிந்ததோடு ரொக்கப் பணத்தையும் பறிமுதல் செய்தனர்.



சென்னை மாநகராட்சியில் ராயபுரம், திரு.வி.க.நகர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், பெருங்குடி ஆகிய 6 மண்டல அலுவலகங்களில் கடந்த 3ம் தேதி நடைபெற்ற சோதனையில் கணக்கில்வராத பணம் கைப்பற்றப்பட்டது. யுபிஐ பரிவர்த்தனை மூலம் லஞ்சம் கைமாறியதும் கண்டுபிடிக்கப்பட்டது.

மாநகராட்சி மண்டலங்களில் நடைபெற்ற சோதனை அடிப்படையிலான அறிக்கைகளை வழங்கியதன் அதனடிப்படையில், 7 பேரை மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ். சமீரன் சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டுள்ளார். திரு.வி.க.நகர் மண்டலத்தில் செயற் பொறியாளர் ஆர்.சரவணன், உதவி செயற்பொறியாளர் டி.ரவிவரமன், உதவி பொறியாளர் டி.சரஸ்வதி, வருவாய் பிரிவு இளநிலை உதவியாளர். மணிகண்டன் ஆகிய 4 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

தேனாம்பேட்டை மண்டலத்தில் கண்காணிப்பாளர் ஏ.ஸ்ரீராமுலு, சுகாதார ஆய்வாளர் ஏ.மஞ்சித் ஹுசைன், தூய்மைப் பணி மேற்பார்வையாளர் ஆர்.கோதண்டன் ஆகிய 3 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டு எஃப்ஐஆரும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# உயர்கல்வி துறையில் ஊழல் குறித்து புகார் அளிக்க இணையதளம்: அமைச்சர் விஸ்வநாதன் தகவல்

சென்னை, ஜூலை.20–
உயர் கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாதன், சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கூறியதாவது: தமிழகத்தில் பல்வேறு அரசு கல்லூரிகளில் முதல்வர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அதேபோல், கவுரவ விரிவுரையாளர்கள் கோரிக்கை உட்பட ஏராளமான கோரிக்கைகள் உள்ளன.

அவற்றை எல்லாம் விரைவில் சரிசெய்வோம். எங்களுக்கு கொஞ்சம் காலஅவகாசம் தேவைப்படுகிறது. துணைவேந்தர், பதிவாளர், முதல்வர், ஆட்சிமன்றக் குழு அளவில் ஊழல்கள் நடைபெறாதவாறு நடவடிக்கை எடுத்துள் ளோம். இதுதவிர பணி நியமனத்திலும் ஊழல்கள் நடை பெறாது.



மேலும், உயர்கல்வித் துறையில் ஊழல் தொடர்பாக புகார் அளிக்க விரைவில் இணையதளம் அறிவிக்கப்பட உள்ளது. யாராவது லஞ்சம் கேட்டால் அதில் தெரிவிக்கலாம். அதை விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்போம்.

வெறும் பட்டப் படிப்பு வழங்கும் முறையை மாற்றி, வேலைவாய்ப்புடன் கூடிய கல்வியை வழங்க உரிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. பள்ளி, கல்லூரி வளாகங்களில் போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலும் ஒழிக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின் றன. இவ்வாறு அவர் கூறினார்.

# வங்கதேசத்தில் 81 அடி உயர ராமர் சிலை அமைத்த இளைஞர் கைது

வங்கதேசம், ஜூலை.20–
வங்கதேசத்தின் கைபந்தா மாவட்டம் பலாஷ்பாரி என்ற இடத்தில் 81 அடி உயர ராமர் சிலை அமைக்கும் பணியில் ஹரிதாஸ் என்பவர் ஈடுபட்டிருந்தார். இந்நிலையில், அவர் மீது பண மோசடி வழக்குப் பதிவு செய்து போலீஸார் கைது செய்துள்ளனர்.

இதற்குக் கண்டனம் தெரிவித்து வங்கதேச சிறுபான்மையின அமைப்புகள் தாகாவில் உள்ள பத்திரிகையாளர் மன்றம் முன்பாக நேற்று மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். ராமர் சிலை கட்டுவதை தடுக்கவே இந்த பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகச் சிறுபான்மையின தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வங்கதேசத்தில் இந்து பவுத்த கிறிஸ்தவ ஒற்றுமை கவுன்சில் இந்த போராட்டத்தை நடத்தியது. இதில் பல சிறுபான்மையின தலைவர்கள் கலந்து கொண்டு, ஹரிதாஸை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர்.





இதுகுறித்து அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் மணீந்திர குமார் நாத் கூறுகையில், "ராமர் சிலை அமைத்ததற்காக ஹரிதாஸ் கைது செய்யப்பட்டுள்ளதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

வங்கதேசத்தில் கடந்த 2 ஆண்டுகளாக சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறைகளும், அநியாய கைதுகளும் தொடர்ந்து நடந்து வருகின்றன. கடந்த ஓராண்டில் மட்டும் 3,000க்கும் மேற்பட்ட அத்துமீறல்கள் நடந்துள்ளன. கோயில்கள் தாக்கப்பட்டுள்ளன" என்றார். இதற்கிடையில், ஹரிதாஸ் ரூ.9.35 கோடியை சந்தேகத்துக்குரிய பணப் பரிவர்த்தனை செய்ததாக குற்றப் புலனாய்வுத் துறை கூறியுள்ளது. அவர் 2010ல் இந்தியாவுக்குச் சென்றதாகவும், பின்னர் 2019ல் மதம் மாறியதாகவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வங்கதேசத்தில் சிறுபான்மையினரின் பாதுகாப்பு குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில் இந்த போராட்டம் வெடித்துள்ளது. இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறும்போது, "வங்கதேசத்தில் தீவிரவாத சக்திகளை ஒடுக்கி, சிறுபான்மை சமூக மக்களின் பாதுகாப்பை அந்நாட்டு அரசு உறுதி செய்ய வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

# மதுரை அருகே 2000 வருட பழமையான தாழிப்பானை கண்டுபிடிப்பு

மதுரை, ஜூலை.20–
மதுரை அருகே 2000 வருட பழமையான தாழிப்பானை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சங்க காலத்திற்கு முன்பு அதாவது கிபி 2000 வருடத்திற்கு முன்பாக தமிழகத்தில் இறந்தவர்களை மண் பானையில் வைத்து புதைக்கும் வழக்கம் இருந்துள்ளது.

இதில் முழு உடலையும் உள்ளே வைத்து புதைப்பார்கள். மண்பானையில் முழு உடலையும் வைத்து புதைப்பார்கள் அல்லது இறந்தவர்களின் எலும்புகளை சேகரித்து அதனை பானையில் வைத்தும் புதைப்பார்கள் அல்லது இறந்தவர்கள் பயன்படுத்திய பொருட்களை மட்டும் தாழிப் பானையில் வைத்து புதைக்கும் வழக்கம் இருந்துள்ளது. இந்த மண்பானை கருப்பு சிகப்பு நிறத்தில் இருக்கும்.



மதுரை மாவட்டம் பேரையூர் வட்டம் பாப்பி நாயக்கன்பட்டி சங்கரலிங்கபுரம் பகுதியில் இருக்கும் சல்லுப்பன் கரடு அடிவாரத்தில் தாழிப்பானை மூன்று சிதைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த கரடு அருகே இருக்கும் பாப்பி நாயக்கன்பட்டி கண்மாயிலும் மண்ணில் புதைந்த நிலையில் தாழி பானை ஒன்று இருக்கிறது. கரடில் இருக்கும் தாழிப் பானையின் உள்ளே எலும்பு துண்டுகளும் காணப்படுகிறது.

இப்பகுதி முழுவதும் கருப்பு சிவப்பினால் ஆன பானை ஓடுகள் விரவிக் கிடக்கின்றன. இது ஒரு ஈமக்காடுபோல் காட்சியளிக்கிறது.

மதுரை இயற்கை பண்பாடு அறக்கட்டளை குழுவினர்கள் இப்பகுதியை மேற்பரப்புகள ஆய்வு செய்தனர். இதில் சிறபத்துறை ஆய்வாளர் தேவி அறிவு செல்வம், வரலாற்று ஆர்வலர்கள் வினோத், விஜய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# "உழவர் சந்தையில் தரமற்ற எடை இயந்திரங்கள் குறித்த தரவுகளை உடனே வழங்குக"; வேளாண் அமைச்சர் உத்தரவு

கும்பகோணம், ஜூலை.20–
"கும்பகோணத்தில் உள்ள உழவர் சந்தையில் தரமற்ற எடை இயந்திரங்கள் குறித்த அனைத்து தரவுகளையும் உடனே வழங்க வேண்டும்," என வேளாண் துறை அமைச்சர் வினோத் உத்தரவிட்டார்.

கும்பகோணம் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள உழவர் சந்தையில் வேளாண்மைத் துறை அமைச்சர் வினோத் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அங்கு சேதமடைந்துள்ள குளிரூட்டும் அறை, போதிய மின் விளக்கு இல்லாதது, தரமற்ற குடிநீர், காலியாக உள்ள கடைகளை பார்வையிட்டார்.

அப்போது, தனியாருக்கு கடைகள் அமைக்க அனுகவும் என தகவல் பலகையை வைத்திருப்பதை அறிந்து, உடனடியாக அகற்ற வேண்டும், அதற்கு பதிலாக விவசாயிகள் கடை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், உழவர் சந்தை உழவருக்கே என அறிவுறுத்தினார்.



தொடர்ந்து அங்கு வைக்கப்பட்டுள்ள தரமற்ற எடை இயந்திரத்தை பார்வையிட்டு, எங்கு, யார் வாங்கியது, எந்த அதிகாரி ஒப்புதல் அளித்தது உள்ளிட்ட அனைத்து தரவுகளை உடனடியாக வழங்க வேண்டும் என அங்குள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதே போல் அங்கு மாலை நேரத்தில் கடை ஏன் நடத்துவதில்லை என வியாபாரிகளிடம் கேட்டார். அதற்கு அவர்கள் மாலை நேரத்தில் குடி போதையில் வந்து தகராறு செய்வதால் கடை நடத்துவதில்லை என தெரிவித்தார். வியாபாரிகளின் அனைத்து கோரிக்கையும் உடனடியாக தீர்வு காணப்படும் என அவர்களுக்கு உத்தரவாதம் அளித்தார்.

இதே போல் கும்பகோணம் மாநகர் பகுதியில் உள்ள வாய்க்கால்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கும்பகோணத்திற்குள் செல்லும் 5 வாய்க்கால்கள் கடந்த பல ஆண்டுகளாக ஆக்கிரமிக்கப்பட்டும், பல்வேறு பகுதிகள் தூர்ந்து, புதர் மண்டியும் காட்சியளிக்கின்றன. ஆனால் வாய்க்கால்களில் கழிவுகள் கலப்பதால் தூர்வார முடியாமல் இருந்து வந்தது.

இது தொடர்பாக சமூக ஆர்வலர்கள், வேளாண் துறை அமைச்சர் வினோத்திடம் வாய்க்கால்களை தூர்வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீர் விட வழிவகை செய்ய வேண்டும் என வலியுறுத்தி இருந்தனர்.

இதைத்தொடர்ந்து வேளாண்மைத்துறை அமைச்சர் வினோத், தேப்பெருமாநல்லூர், பழவத்தான்கட்டளை வாய்க்கால்களில் கழிவுநீர் கலக்கும் இடங்கள் மற்றும் புதர் மண்டியுள்ள பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டப்பின் செய்தியாளர்களிடம் கூறியது: கும்பகோணம் மாநகராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் ஓடும் வாய்க்கால்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, கழிவுநீர் கலப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த வாய்க் கால்களைத் தூர் வாருவதற்கான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, இன்னும் ஒரு சில நாட்களில் தூர்வாரும் பணிகள் தொடங்க உள்ளன.

இப்பணிகள் முழுமையாக முடி வடையும் போது இந்த வாய்க்கால்களில் எளிதாகக் காவிரி நீரைக் கொண்டு வர முடியும். இதன் மூலம் கும்பகோணம் தூய்மையான மாநகராக மாறுவதோடு, நிலத்தடி நீர் மட்டம் உயரும். இந்த முயற்சிக்கு கும்பகோணத்தில் வசிக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்றார் அவர்.

அவருடன் நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் முத்துமணி, உதவி பொறியாளர் கார்த்திகேயன் ஆகியோர் உடனிருந்தனர்.

## அயோத்தி கோயில் காணிக்கைத் திருட்டு வழக்கு

# டின்னு, மனிஷிடம் 39 மணி நேரம் விசாரிக்க அனுமதி

புதுடெல்லி, ஜூலை.20–
உத்தர பிரதேச மாநிலம் அயோத்தி ராமர் கோயில் காணிக்கை திருட்டு வழக்கில் முக்கிய குற்றவாளிகள் ராம் ஷங்கர் யாதவ் (எ) டின்னு மற்றும் அவரது சகோதரி மகன் மனிஷ் யாதவ் ஆகியோரைப் போலீஸார் நேற்று அயோத்தி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இவர்கள் இருவரையும் 7 நாட்கள் காவலில் விசாரிக்க நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை சார்பில் அனுமதி கோரப்பட்டது. அதை ஏற்ற நீதிமன்றம், இருவரிடமும் 39 மணி நேரம் விசாரணை நடத்த அனுமதி அளித்தது. இதையடுத்து, ராமர் கோயிலில் திருடப்பட்ட மொத்தத் தொகை, யாரெல்லாம் உடந்தை, ஒட்டுமொத்த திருட்டுக்கு பின்னணியில் உள்ளவர்கள் என்பது குறித்து சிறப்பு விசாரணைக் குழுவினர் (எஸ்ஐடி) விசாரிக்க உள்ளனர்.

ஏற்கெனவே போலீஸார் நடத்திய விசாரணையில் ராமர் கோயில் திருட்டை இருவரும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால், டின்னுவிடம் இதுவரை வெறும் ரூ.1 லட்சம் மட்டுமே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கோயிலில் நடந்த முறைகேடுகள் அனைத்துக்கும் மூலக் காரணமாக டின்னு இருந்துள்ளார். அவரிடம்தான் நன்கொடை பணம், நகைகள் வைக்கும்



பெட்டிகளின் சாவிகள் இருந்துள்ளன.

திருட்டு விவகாரம் வெளியில் கசிந்த பிறகு ஸ்ரீ ராமர் கோயில் தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளையில் காணிக்கைகள் எண்ணும் பணி கோயிலின் அடித்தள அரங்குக்கு மாற்றப்பட்டுள்ளது. அத்துடன், காணிக்கை எண்ணும் பணிகளை சிசிடிவி கேமராக்கள் மூலம் பக்தர்களும் பார்வையிடும் வகையில் பெரிய எல்இடி திரை அமைக்கப்பட்டுள்ளது.

காணிக்கை எண்ணும் பணியைக் கண்காணிக்க ராணுவம், காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற எஸ்ஐஎஸ் மற்றும் பிபிஐஎஸ் நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கோயில் காணிக்கை திருட்டை விசாரித்து வரும் எஸ்ஐடி விரைவில் தனது அறிக்கையை உ.பி. அரசிடம் சமர்ப்பிக்கும் என்று தெரிகிறது. அறக்கட்டளை முன்னாள் நிர்வாகி டாக்டர் அனில் மிஸ்ரா மீதும் சந்தேகம் எழுந்துள்ளது. இவரது பரிந்துரையால் காணிக்கை பொறுப்பாளராக இருந்த சுபாஷ் ஸ்ரீ வத்ஸவா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தனக்கு நெருக்கமான சுபாஷ் கோயிலில் திருடியதை மிஸ்ரா கண்டுகொள்ளவில்லை என்று அவர் மீது புகார் உள்ளது.


காணிக்கை திருட்டு மிகப்பெரிய தவறு என்று ஒப்புக் கொண்டுள்ள அறக்கட்டளை, அதற்கு மன்னிப்பு கோரும் வகையில் சிறப்பு பூஜைகள் நடத்தினர். கோயில் வளாகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மொத்தம் 70 வேத விற்பன்னர்கள் இதில் பங்கேற்றனர். பத்து நாட்களுக்கான இந்த பிராயச்சித்த வழிபாடு, கருவறை மற்றும் சுற்றுச்சுவர் பகுதிகளில் நடைபெறுகிறது. வேதபாராயணம், ஹவனம், ருத்ராபிஷேகம் மற்றும் ராமார்ச்சனை ஆகியவை நடைபெறுகின்றன.

# வங்கதேச பெண்களை திருமணம் செய்தால் மரண தண்டனை

## சீனர்களுக்குத் தூதரகம் எச்சரிக்கை

புதுடெல்லி, ஜூலை.20–
கடந்த 2020ம் ஆண்டு சீன மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, பெண்களை விட திருமண வயதில் உள்ள ஆண்கள் சுமார் 1.75 கோடி அதிகமாக உள்ளனர். இதனால், அவர்கள் வெளிநாடுகளில் சட்ட விரோத தரகர்கள் மூலம் பெண்களை மணம் முடிக்கும் போக்கு அதிகரித்து வருகிறது.

சீன உச்ச நீதிமன்றத்தகவல்படி, கடந்த 2024 ஜனவரி முதல் 2025 மார்ச் வரை மட்டும், திருமண மோசடி மற்றும் மனிதக் கடத்தலில் ஈடுபட்ட 1,546 பேர் சீனாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். பெரும்பாலான வழக்குகளில், சீன ஆண்கள் ஆயிரக்கணக்கான யுவான் பணத்தைக் கொடுத்து திருமணம் செய்த வெளிநாட்டுப் பெண்கள் சில நாட்களிலேயே காணாமல் போய்விடுவதாகவும், சில இடங்களில் வெளிநாட்டுப் பெண்கள் கடத்தப்பட்டு சீன ஆண்களைத் திருமணம் செய்ய வற்புறுத்தப்படுவதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.இதன் காரணமாக, வங்க தேசம் தவிர ஏற்கெனவே வியட்நாம், மியான்மர், லாவோஸ், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலும் உள்ள சீனத் தூதரகங்கள் திருமண மோசடி குறித்து எச்சரிக்கைகளை விடுத்துள்ளன. இந்த நிலையில், சீனாவைச் சேர்ந்த ஆண்கள் பலர் வங்க தேசத்திற்கு வந்து, இடைத்தரகர்கள் மூலம் பெண்களைப் பணம் கொடுத்து வாங்குவதாக புகார்கள் எழுந்துள்ளது.இதைத் தொடர்ந்து வங்க தேசத்தில் உள்ள சீன தூதரகம் கூறியுள்ளதாவது: வங்கதேச சட்டத்தின் படி மனிதக் கடத்தல் வழக்குகளில் மிகக் கடுமையான குற்றங்களுக்கு ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை வரை விதிக்கப்பட வாய்ப்புள்ளது. இக்குற்றத்தில் ஈடுபடுபவர்களுக்குக் குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், சுமார் ரூ.3.95 லட்சம் அபராதமும் விதிக்கப்படும்.



மேலும், திருமணக் கடத்தல் குற்றங்களுக்குத் தூண்டுதலாகவோ அல்லது உடந்தையாகவோ இருப்பவர்களுக்கு 3 முதல் 7 ஆண்டுகள் வரை சிறை, ரூ.15,600 அபராதம் விதிக்கப்படும். திருமணங்கள் உண்மையான அன்புடன் அமைய வேண்டும். பெண்களைப் பணம் கொடுத்து வாங்குவது பிற்காலத்தில் கடுமையான நிதி இழப்புக்கும், உயிருக்கே ஆபத்தான சூழ்நிலைகளுக்கும் வழிவகுக்கும். இவ்வாறு சீன தூதரகம் கூறியுள்ளது.

# புதுச்சேரியில் இனி முதல்வருக்கு மட்டும் தேர்தல் நடத்தினால் போதும்"; வைத்திலிங்கம் எம்.பி

புதுச்சேரி, ஜூலை.20–
"புஷ்கர் விழாவை சிறிய பகுதியான ஏனாமில் நடத்த கொண்டு செல்லாமல் புதுச்சேரியில் திருக்காஞ்சியில் கொண்டாட வேண்டும்," என மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி கூறியுள்ளார்.

புதுச்சேரியில் அடுத்த தேர்தலே தேவையில்லை முதல்வருக்கு மட்டும் தேர்தல் வைத்தால் போதும் என்றும் குறிப்பிட்டார். புதுச்சேரி மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி செய்தியாளர்களிடம் இன்று கூறியதாவது: "புதுச்சேரியில் ரேஷன் கடைகளை முழுமையாக திறந்து அரிசி விநியோகம் சரியாக நடக்க வேண்டும். தற்போதுள்ள ரேஷன் கடை ஊழியர்களுக்கு ஊதியம் தர வேண்டும். மின்துறையில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்துகிறார்கள். இதற்கான தொகையை பயனீட்டாளர்களிடம் வசூலிக்க உள்ளார்களா. மின்சாரத் துறையை தனியாரிடம் தரப்போகிறார்களா என்பதை முதல்வர் தெரிவிக்க வேண்டும்.




தனியாரிடம் தர முதல்கட்ட நடவடிக்கை எடுக்கிறீர்களா என்பதை ஆளுநர் பதில் உடன் தர வேண்டும். புஷ்கர் விழா புதுச்சேரி திருக்காஞ்சியில் கொண்டாட வேண்டும். இங்கு நடத்தாமல் சிறிய பகுதியான ஏனாமில் நடத்த கொண்டு செல்கிறார்கள். இதற்காக மத்திய அரசு ஒதுக்குவதாக தெரிவித்துள்ள ரூ.48 கோடியை புதுச்சேரியில் பயன்படுத்த வேண்டும்.

திருக்காஞ்சியில் ரூ.200 கோடி அளவுக்கு பெரிய விழாவாக புஷ்கர் விழா நடத்த வேண்டும். இல்லாவிட்டால் இந்து மக்களை புதுச்சேரி அரசு ஏமாற்றுவதாக அர்த்தம். போலி மருந்து தொழிற்சாலையில் பிடிப்போரை புதுச்சேரியில் உடன் விடுவித்துவிடுகிறார்கள். கடந்த முறை சிபிசிஐடி நன்றாக வேலை செய்த நிலையில் சிபிஐயிடம் ஒப்படைத்தனர்.

அவர்களுக்கு லஞ்சம் தந்தோர், உடன் சென்ற போலீஸ்காரர், பின்னால் இருக்கும் அரசியல்வாதி, எம்எல்ஏ யார் என்பதை வெளியிடவேண்டும். புதுச்சேரி அரசு முழு ஆதரவுடன் போலி மருந்து உற்பத்தி, கடத்தல் நடக்கிறது. போலி மருந்து வெளி மாநிலங்கள், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கு கடத்தப்படுகிறது. இவ்விஷயத்தில் தமிழகத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளதால் உரிய நடவடிக்கையை அந்த அரசு எடுக்கும்.

புதுச்சேரியில் அடுத்த தேர்தலே தேவையில்லை. முதல்வருக்கு மட்டும் தேர்தல் வைத்தால் போதும். அவரே அனைத்தும் வைத்துகொள்வார். அனைத்து அதிகாரங்களும் தனக்கு வேண்டும் என முதல்வர் நினைக்கிறார். காட்டு அரசாங்கம் தான் நடக்கிறது மக்கள் தான் பார்க்க வேண்டும்" என்றார்.

பாஜகவுடன் திமுக கூட்டணி என்று அமைக்க உள்ளதாக சொல்கிறார்களே என்று கேட்டதற்கு, "அதை அவர்களிடம் தான் கேட்க வேண்டும். முதலில் வெளியே வரட்டும் அதன் பிறகு தெரியும் திமுக ஆதரவுாடு புதுச்சேரியில் பாஜக ஆட்சி அமையுமா என்று கேள்வி கேளுங்கள். நீங்கள் சொல்வதை பார்த்தால் புதுச்சேரியில் தான் முதலில் இதுபோல் அமையும்," என்றார்.

புதுச்சேரியில் தவெகவுடன் கூட்டணி இருக்குமா. வரும் இடைத் தேர்தலில் நட்பு போட்டி தொடருமா எனக் கேட்டதற்கு, "நிலைப்பாடு பின்னர் தெரிவிக்கப்படும். பேச்சுவார்த்தைக்கு பிறகு தெரியும். நட்பு போட்டி நிச்சயம் இருக்காது," என்றார். பேட்டியின்போது எம்எல்ஏ கார்த்திகேயன், முன்னாள் எம்எல்ஏக்கள் பாலன், அனந்தராமன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

ஒரு மணி நேரம் எம்எல்ஏவுக்காக காத்திருந்த எம்பி: புதுச்சேரி காங்கிரஸ் அலுவலகத்தில் பேட்டிக்காக மாநிலத் தலைவர் எம்.பி வைத்திலிங்கம் வந்து காத்திருந்தார். ஆனால் செய்தியாளர் சந்திப்பை தொடங்கவில்லை. புதுச்சேரி காங்கிரஸின் ஒரே எம்எல்ஏவான கார்த்திகேயன் வருகைக்காக காத்திருப்பதாக சொன்னார். சுமார் ஒரு மணி நேரத்துக்கு பின்னரே கார்த்திக்கேயன் வந்தார். அதன் பிறகே செய்தியாளர் சந்திப்பு தொடங்கியது குறிப்பிடத்தக்கது

# ஒசூரில் ஹாட்கோ காவல் நிலைய போலீசார் அதிரடி சோதனை: வீடு வீடாக தீவிர கண்காணிப்பு



கிருஷ்ணகிரி, ஜூலை.20-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் 2வது சிப்காட், குமுதேபள்ளி, காந்திநகர் உள்ளிட்ட பகுதிகளில் வடமாநில தெ ாழிலாளர்கள் தங்கியுள்ள குடியிருப்புகளில் ஹாட்கோ காவல் நிலைய போலீசார் இன்று காலை முதல் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். ஒசூர் துணைக் காவல் கண்கணிப்பாளர் (டி.எஸ்.பி.) பாலகிருஷ்ணன் தலைமையில் 40க்கும் மேற்பட்ட போலீசார் வீடு வீடாகச் சென்று சோதனை நடத்தினர்.இந்த சோதனையின் முக்கிய நோக்கம் கஞ்சா, குட்கா உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்களின் விற்பனையைத் தடுக்கவும், சட்டவிரோதமாக நாட்டிற்குள் ஊடுருவி தங்கியிருப்பவர்களை கண்டறியவும் ஆகும்.மேலும், விடுதி மற்றும் வாடகை வீட்டு உரிமையாளர்கள், உரிய அடையாள ஆவணங்கள் இல்லாத நபர்களை தங்க வைக்கக் கூடாது என்றும், போதைப்பொருள் புழக்கம் அல்லது சந்தேகத்திற்கிடமான நபர்கள் குறித்து உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் போலீசார் எச்சரிக்கை விடுத்தனர்.

# NEET 2026ல் ஸ்ரீ சைதன்யா மாணவர்களின் பிரமாண்ட சாதனை பல்லாவரத்தில் பாராட்டு விழா




பல்லாவரம், ஜூலை.20-

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் ரேடியல் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ சைதன்யா பள்ளியில், NEET-Uஜி 2026 தேர்வில் சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவர் க்ஷிகளுக்கு பாராட்டு விழா உற்சாகமாக நடைபெற்றது. நாடு முழுவதும் தேசிய தேர்வு முகமை நடத்திய NEET-UG 2026 தேர்வில், ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவன மாணவர்கள் சிறப்பான தேர்ச்சி பெற்று மீண்டும் ஒரு முறை தங்களது கல்வித் திறமையை நிரூபித்துள்ளனர்.இந்தத் தேர்வில், அகில இந்திய அளவில் முதல் 10 இடங்களில் இரண்டு மாணவர்கள் இடம்பெற்றுள்ளனர். மேலும், முதல் 100 இடங்களில் 17 மாணவர்களும், முதல் 1000 இடங்களில் 85 மாணவர்களும் இடம்பிடித்து குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்ரீ சைதன்யா மாணவர்கள், அகில இந்திய பொது பிரிவில் 287, 291, 393, 521, 754 மற்றும் 823 ஆகிய தரவரிசைகளைப் பெற்று கல்வித் துறையில் பெருமை சேர்த்துள்ளனர். இதன் மூலம், மருத்துவ நுழைவுத் தேர்வுக்கான சிறந்த பயிற்சி வழங்கும் கல்வி நிறுவனங்களில் ஒன்றாக ஸ்ரீ சைதன்யா மீண்டும் தனது தரத்தை நிரூபித்துள்ளது. இந்த வெற்றியை கொண்டாடும் வகையில் நடைபெற்ற பாராட்டு விழாவில், 550 மதிப்பெண்களுக்கு மேல் பெற்ற 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். மேலும், இந்த ஆண்டு மொத்தமாக 250க்கும் மேற்பட்ட மருத்துவ இடங்களை மாணவர்கள் பெறுவார்கள் என்ற நம்பிக்கையும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.விழாவில், ஸ்ரீ சைதன்யா கல்வி நிறுவனங்களின் இயக்குநர் சுஷ்மா பொப்பனா, பள்ளி இயக்குநர் டி. நாகேந்திரா, தமிழ்நாடு நிர்வாக செயல்பாட்டு தலைவர் ஜே. ஹரிபாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற மாணவர்கள், அவர்களது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.மருத்துவக் கனவை நனவாக்கும் மாணவர்களின் இந்த வெற்றி, கல்வித் துறையில் மேலும் பல சாதனைகளுக்கு வழிகாட்டும் என நிகழ்ச்சியில் பேசப்பட்டது.

# நீலகிரி மாவட்டம் தேவாலா அட்டி பள்ளியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு



பந்தலூர், ஜூலை.20-

நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே உள்ள தேவாலா அட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் மற்றும் ஆல் தி சில்ரன் ஆகியன சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் பொ ராஜலட்சுமி தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையத்தின் செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசுகையில், மனித வாழ்வு இயற்கையோடு ஒன்றிணைந்தது. நீர், நிலம், காற்று, ஆகாயம் உள்ளிட்ட இயற்கை வளங்களின் பாதுகாப்பே மனித சமூகத்தின் பாதுகாப்பாகும். நீர்நிலைகளில் வீட்டு கழிவுகள், குப்பைகள் மற்றும் இரசாயனப் பொருட்கள் கலப்பதால் நீர் மாசடைந்து பல்வேறு நோய்கள் உருவாகின்றன. இரசாயன உரங்கள் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாடு மண்ணின் வளத்தை குறைப்பதோடு, பிளாஸ்டிக் கழிவுகளை எரிப்பதால் காற்று மாசுபட்டு சுவாச நோய்கள் உள்ளிட்ட பல்வேறு உடல்நலப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. சுற்றுச்சூழலை பாதுகாப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்த்து, இயற்கைக்கு உகந்த பொருட்களை பயன்படுத்த வேண்டும். மரங்களை வளர்த்து, இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்க முடியும் என்றார். ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் பேசுகையில், ஒவ்வொரு மாணவரும் குறைந்தபட்சம் ஒரு மரக்கன்றையாவது நட்டு பராமரிக்க வேண்டும். பறவைகள் மற்றும் விலங்குகளை நேசித்து பாதுகாக்கும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். தேவையற்ற பொருட்களைத் தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டும் என்றார்.நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள் தரிசணதேவி, சாந்தி, தமிழ்ச் செல்வன், சித்ராதேவி, மாணவர்கள், நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் மகேந்திர பூபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருத்தணி காவல் நிலையம் அருகே மெக்கானிக் கண்களில் மிளகாய் பொடி வீசி கொடூர தாக்குதல்




திருத்தணி, ஜூலை.20-

திருத்தணி காவல் நிலையம் அருகே மெக்கானிக் கண்களில் மிளகாய் பொடி வீசி கொடூரமாக தாக்கிய சம்பவத்தில் இரவு முழுவதும் உயிருக்கு போராடிய வாலிபரை அதிகாலை பொதுமக்கள் மீட்டு மருத்துவமனையில் சேர்த்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. திருத்தணி ஜெ.ஜெ. ரவி நகர் பகுதியை சேர்ந்தவர் தமிழரசன் (32). அதே பகுதியில் உள்ள இருசக்கர வாகனங்கள் விற்பனை ஏஜென்சியில் மெக்கானிக்காக பணியாற்றி வந்துள்ளார். தற்போது வேலையை விட்டு தனியார் கம்பெனியின் உணவு டெலிவரி செய்யும் வேலையை கடந்த 20 நாட்களாக செய்து வந்ததாக கூறப்படுகிறது. இவரது மனைவி பிரியா. தனியார் காபி விற்பனை கடையில் வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில் நேற்று இரவு 8 மணி அளவில் வெளியில் சென்ற தமிழரசன் இரவு முழுவதும் வீடு திரும்பவில்லை. இதனால் மனைவி சந்தேகமடைந்து உறவினர் உள்ளிட்ட பலரிடம் விசாரித்துள்ளார். ஆனால் எந்தவித தகவலும் கிடைக்கவில்லை. இதனிடையே, திருத்தணி காவல் நிலையம் அருகே கன்னிகாபுரம் சாலையோரத்தில் வாலிபர் ஒருவர் தலையில் பலத்த வெட்டு காயங்களுடன் அருகில் மிளகாய் பொடி கொட்டி இருந்ததை பார்த்து அவ்வழியாக சென்றவர்கள் அதிர்ச்சியடைந்தனர். உடனடியாக இதுகுறித்து திருத்தணி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்படி சம்பவ இடத்துக்கு வந்த போலீசார், உயிருக்கு போராடிய வாலிபரை மீட்டு விசாரித்தபோது தமிழரசன் என்பது தெரியவந்தது. பின்னர், சிகிச்சைக்காக அவரை திருத்தணி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து முன்விரோதம் காரணமாக வெட்டப்பட்டாரா? அல்லது வழிப்பறி கும்பல் நகை, செல்போனை பறிக்க மிளகாய் பொடி தூவி வெட்டினார்களா? என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர். திருத்தணி காவல் நிலையம் அருகே மிளகாய் பொடி வீசி மெக்கானிக்கை கும்பல் வெட்டிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# பெற்றோரை தாக்கி சிறுமி கடத்தல்: திருத்தணியில் புகார் பெற மறுப்பு


திருத்தணி, ஜூலை.20-

பெற்றோரை தாக்கி சிறுமியை கடத்தல் சம்பவம் தொடர்பாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றவர்களிடம் புகார் பெற மறுத்து அனுப்பி சம்பவம் திருத்தணியில் நேற்று பரபரப்பை ஏற்படுத்தியது. பள்ளிப்பட்டு அடுத்த புண்ணியம் கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தன் கூலித்தொழிலாளி. மகள் சந்தியா(16) என்ற சிறுமியை நேற்று முன்தினம் இரவு ஆந்திர மாநிலம் நகரி பகுதியைச் சேர்ந்த 8 பேர் அத்துமீறி வீட்டில் புகுந்து ஆனந்தன் அவரது மனைவி லட்சுமியை தாக்கி அவர்களின் மகளை கடத்தி சென்று விட்டதாக கூறி திருத்தணி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க வந்திருந்தனர். காவல் நிலையத்தில் ஆய்வாளர் மலர் இல்லாத நிலையில் தலைமை காவலர் ஒருவர் மட்டும் பணியில் இருந்தார். அவரிடம் புகார் அளிக்க சென்ற லட்சுமியை நீண்ட நேரம் காக்க வைத்து எந்த ஊரு என்று கேட்டு பொதட்டூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும். இங்கு புகார் கொடுக்க கூடாது என்று தெரிவித்தார். சிறுமியை கடத்தியதால் இங்கு புகார் அளிக்க வந்தோம் என்று கூறியும் பொருட்படுத்தாமல் புகார் பெற மறுத்து அனுப்பிவிட்டனர். வேறு வழியின்றி தம்பதிகள் பொதட்டூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றனர். திருத்தணி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தினமும் பாலியல் மற்றும் குடும்ப பிரச்னை தொடர்பான புகார்கள் வந்தாலும் ஆய்வாளர் முறையாக புகார்கள் பெற்று விசாரிக்காமல் காலம் கடத்தி காவல் நிலையத்தில் பஞ்சாயத்து பேசி அனுப்பவதாக தொடர் புகார்கள் எழுந்துள்ளது. பாலியல் புகார்கள் மீது உடனடியாக வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதை மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுத்தனர்

# மதுபானம் கலந்த ஐஸ்கிரீம் விற்பனை: திருமங்கலத்தில் கடைக்கு சீல்

அண்ணாநகர், ஜூலை.20-

சென்னை திருமங்கலம், வெல்கம் காலனி முதல் தெருவில் ஒரு தனியார் ஐஸ்கிரீம் கடையில் மதுபானம் கலந்த ஐஸ்கிரீம்கள் விற்பனை செய்யப்படுவதாக கடந்த 15 நாட்களுக்கு முன் சென்னை உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளுக்கு ஏராளமான புகார்கள் வந்தன.




இப்புகாரின்பேரில், அந்த கடைக்கு கடந்த 6ம் தேதி உணவு பாதுகாப்பு அதிகாரிகள் சென்று அதிரடி ஆய்வு மேற்கொண்டனர்.Long Distance Bus & Rail

இந்த ஆய்வில், அக்கடையில் விற்பனை செய்யப்படும் ஐஸ்கிரீம் வகைகள் மற்றும் அதன் பிளேவர்களின் மாதிரிகளை உணவு பாதுகாப்பு அதிகாரிகள் சேகரித்து, ஆய்வுக்கூட பரிசோதனைக்கு எடுத்து சென்றனர். இந்த ஆய்வு முடிவில், அந்த ஐஸ்கிரீம் கடையில் விற்பனை செய்யப்பட்ட பல்வகை பிளேவர் ஐஸ்கிரீம்களில் மதுபானம் கலந்திருப்பது உறுதியானது. இதைத் தொடர்ந்து, திருமங்கலத்தில் உள்ள தனியார் ஐஸ்கிரீம் கடைக்கு நேற்று மாலை உணவு பாதுகாப்பு அதிகாரிகள் சென்று பூட்டி சீல் வைத்தனர். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது

# சென்னை விமானநிலையத்தில் மு.க.ஸ்டாலினை வரவேற்க பேண்டு வாத்தியத்துக்கு தடை: போலீசாரிடம் திமுகவினர் வாக்குவாதம்




மீனம்பாக்கம், ஜூலை.20-

தமிழ்நாடு முன்னாள் முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் கடந்த 4ம் தேதி லண்டனுக்குப் புறப்பட்டு சென்றார். அவருடன் மனைவி துர்கா ஸ்டாலினும் உடன் சென்றிருந்தார். லண்டன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் நேரில் கலந்து கொண்டு, உயர்கல்வி பட்டம் பெற்ற பேரன் இன்பநிதியை உச்சிமுகர்ந்து பாராட்டி, வாழ்த்து தெரிவித்தனர். இந்நிலையில், நேற்று மாலை லண்டன் விமானநிலையத்தில் இருந்து மு.க.ஸ்டாலின், தனது மனைவி துர்கா ஸ்டாலின் மற்றும் உதயநிதி ஸ்டாலினுடன் எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் விமானத்தில் புறப்பட்டு, துபாய் வழியாக இன்று காலை சென்னை விமானநிலைய பன்னாட்டு முனையத்தில் வந்திறங்குவதாக ஏற்கெனவே திட்டமிடப்பட்டு இருந்தது. எனினும், அவர்கள் லண்டனில் இருந்து சென்னைக்கு புறப்பட்டு வந்த எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் விமானம் துபாய் மற்றும் சென்னைக்கு வந்து சேருவதில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டுள்ளது .முன்னதாக, சென்னைக்கு வரும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலினை வரவேற்க, இன்று காலை சென்னை விமான நிலையத்தில் ஏராளமான திமுக நிர்வாகிகளும் தொண்டர்களும் கட்சிக் கொடிகளுடன் குவிந்திருந்தனர். மேலும், பேண்டு வாத்தியக் குழுவினரும் வந்து மங்கள இசையை வாசிக்கத் துவங்கியுள்ளனர். இது குறித்து தகவலறிந்ததும் சென்னை விமானநிலைய போலீசார் விரைந்து வந்து, சென்னை விமானநி லைய வளாகத்துக்குள் வாத்தியங்கள் இசைப்பதற்கு அனுமதியில்லை என்று தடை விதித்து, பேண்டு வாத்திய குழுவினரை வெளியேற்றும் பணிகளில் ஈடுபட்டனர். இதனால் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் ஒன்றுகூடி, திமுகவின் முக்கிய தலைவர்களின் வருகையின்போது நாங்கள் பேண்டு வாத்திய இசை நிகழ்ச்சி நடத்துவது வழக்கம். இப்போது ஏன் திடீரென தடை போடுகிறீர்கள் என்று போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்

# புஸ்ஸி ஆனந்த் ஊரக வளர்ச்சி மற்றும் நீர் வளத்துறை அமைச்சர் பிறந்தநாள் முன்னிட்டு உதகை ATC திடலில் கேக் வெட்டி கொண்டாட்டம்



உதகை, ஜூலை.20-

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் தமிழகமக்கள் முதல்வர் நல்லாசியுடன்.மற்றும் நீலகிரி மாவட்ட கழக பொறுப்பு அமைச்சர் கமலி உத்தரவின்படி நீலகிரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் D. ரமேஷ் மற்றும் மாவட்ட கழக செயலாளர் S.பாமா ரமேஷ் முன்னிலையில் மரியாதைக்குரிய கழக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஊரக வளர்ச்சி மற்றும் நீர் வளத்துறை அமைச்சர் பிறந்தநாள் முன்னிட்டு உதகை ATC திடலில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது அதை தொடர்ந்து மதியம் 1:00 மணி அளவில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கார்திக் மற்றும் மாவட்ட கிழக்கு நகர செயலாளர் ஜெயக்குமார் மற்றும் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் திரு. பாபு அவர்களின் தலைமையில் சுமார் 2000 ற்கும் மேற்பட்ட நபர்களுக்கு மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் D.ரமேஷ் , மாவட்ட கழக செயலாளர் பாமா ரமேஷ், மற்றும் மாவட்ட கழக இணை செயலாளர் கணேஷ், மாவட்ட கழக பொருளாளர் ராஜேஷ்,மாவட்ட கழக துணை செயலாளர் ஆனந்த் - பஷீர், மாவட்ட கழக ஆலோசகர் ஊட்டி டேனி மற்றும் மாவட்ட அமைப்பாளர் அரக்கம்பை கிருஷ்ணன் மற்றும் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சூரிய பிரகாஷ் - நூர் முகம்மது - செந்தில் குமார் கலந்து கொண்டனரமேலும் கிழக்கு ஒன்றிய செயளாலர் C.S மணிகண்டன் மற்றும் நிர்வாகிகள், தெற்கு ஒன்றிய செயளாலர் . கனகராஜ் மற்றும் நிர்வாகிகள், குந்தா கிழக்கு ஒன்றிய செயளாலர்.. ஜெரால்டு விமல் மற்றும் நிர்வாகிகளமற்றும் கேத்தி பேரூராட்சி செயளாலர் நவீன் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் வினோத் மற்றும் நிர்வாகிகள் , மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் நிஜாம் மற்றும் நிர்வாகிகள் ,மாவட்ட சமூக ஊடக அணி அமைப்பாளர் J.மாதவன் மற்றும் நிர்வாகிகள் , மாவட்ட உறுப்பினர் சேர்க்கை அணி அமைப்பாளர் திருமதி . எஸ்தர் சுதாகர் மற்றும் நிர்வாகிகள் , மாவட்ட இளம்பெண்கள் அணி ஸ்வேதா மற்றும் நிர்வாகிகள் மற்றும் உதகை, மற்றும் குன்னூர் நகர வர்த்தக அணி அமைப்பாளர் ஸிஷீ. தர்மா மற்றும் நிர்வாகிகள் மேலும் உதகை,குன்னூர் கோத்தகிரி, அனைத்து பகுதியில் இருந்து ஏராளமான திரளாக பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்

# மோசமான நிலையில் எள்ளுகுட்டை ஏரி-கே.மோட்டூர் தார் சாலை: உடனடி சீரமைப்பு மற்றும் குரும்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க பொதுமக்கள் கோரிக்கை

கிருஷ்ணகிரி, ஜூலை.20-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்குட்பட்ட எள்ளுகுட்டை ஏரி தார் சாலை முதல் குரும்பட்டி, கே.மோட்டூர் வரை சுமார் 5 கிலோமீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ள தார் சாலை தற்போது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால், அப்பகுதி பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் விவசாயிகள் கடும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். இந்தச் சாலை பல்வேறு இடங்களில் சேதமடைந்து ஆங்காங்கே பெரிய குழிகள் ஏற்பட்டுள்ளதால், தினமும் இந்த வழியாக பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்கள், வேலைக்கு செல்வோர் மற்றும் விவசாயிகள் கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக இருசக்கர வாகனங்களில் பயணிப்பவர்கள் விபத்து



அபாயத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.மேலும், சாலையில் உள்ள குழிகள் காரணமாக பல இருசக்கர வாகனங்கள் பஞ்சராகி பழுதடைந்து நடுவழியில் நிற்கும் சம்பவங்களும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். கர்ப்பிணி பெண்கள் அவசரமாக மருத்துவமனை செல்வதற்கு கூட, சாலைகள் குண்டும் குழியுமாக இருப்பதால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். மழைக்காலங்களில் குழிகளில் தண்ணீர் தேங்குவதால் சாலையின் நிலை மேலும் மோசமடைந்து, உயிரிழப்பு ஏற்படுத்தக்கூடிய விபத்துகளுக்கு வழிவகுக்கும் அபாயம் இருப்பதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்தச் சாலை இஸ்லாமியர்களின் சுடுகாடு வழியாக மிட்ட அள்ளி புதூர், குரும்பட்டி, ஏரிக்கொட்டாய், கே.மோட்டூர், அண்ணா நகர், குட்டூர் உள்ளிட்ட பல கிராமங்களை இணைக்கும் முக்கிய சாலையாகும். இந்தப் பகுதிகளில் வசிக்கும் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்தச் சாலையை அன்றாடப் பயன்பாட்டிற்காக நம்பியுள்ளதால், சாலையை உடனடியாக புதுப்பித்து தரமான தார் சாலையாக அமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர். அதேபோல், குரும்பட்டி கிராமத்தில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வந்த ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் பழைய கட்டிடம் பாதுகாப்பு காரணங்களால் மாவட்ட நிர்வாகத்தால் இடிக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த இடம் காலியாக உள்ள நிலையில், அப்பகுதி மக்களின் நீண்டநாள் தேவையை கருத்தில் கொண்டு அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் (Primary Health Centre) அமைத்துத் தர வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சிறிய உடல்நலப் பிரச்சினைகளுக்குக் கூட பல கிலோமீட்டர் தூரம் பயணித்து மருத்துவ சேவையை நாட வேண்டிய சூழல் நிலவுவதால், குரும்பட்டி மற்றும் சுற்றுவட்டார கிராம மக்களின் நலனை கருத்தில் கொண்டு அந்த காலி இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் பயனடைவார்கள் என அவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டு, எள்ளுகுட்டை ஏரிரூ கே.மோட்டூர் தார் சாலையை உடனடியாக சீரமைப்பதோடு, குரும்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அப்பகுதி பொதுமக்களின் தாழ்மையான கோரிக்கையாக உள்ளது.



■ மானாமதுரையில் தெருநாய்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சைமானாமதுரை: பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், தெருநாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும் மானாமதுரை நகராட்சி சார்பில் Animal Birth Control (ABC) திட்டத்தின் கீழ், நகராட்சி பகுதிகளில் உள்ள தெருநாய்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறை மூலம் கருத்தடை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.மனிதநேய அணுகுமுறையுடன் தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி, பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக நகர்மன்றத் தலைவர் மாரியப்பன் கென்னடி தெரிவித்துள்ளார்.



## சந்தன முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடித்திருவிழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம்

மாதவரம், ஜூலை.20-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பெரியார் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ சந்தன முத்துமாரியம்மன் ஆலயத்தில் 45ம் ஆண்டு ஆடித்திருவிழாவை முன்னிட்டு பெரியார்நகர் இளைஞரணி சார்பில் பொதுமக்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி பெரியார்நகர் இளைஞரணி நிர்வாகிகள் குணசேகர், சந்தோஷ் குமார், பிரபாகரன், அஜி,பிரவின்குமார், மதன் ,தனுஷ், பிரவீன்,கார்த்திக், மோகன், மதன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. முன்னதாக அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னசமுத்திரம் ஊராட்சி, பிச்சனூர் கிராமத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், 2025 2026 ஆம் நிதியாண்டில், 15வது மத்திய நிதிக்குழு சுகாதார மான்ய திட்டத்தின் கீழ், ரூ.78.20 இலட்சம் மதிப்பீட்டில், கட்டப்பட்ட கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் ஆர்.வீ.இரஞ்சித்குமார், மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் Dr.N.திருப்பதி, ஆகியோர் முன்னிலையில் (18.07.2026) அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.தமிழரசி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ஆர்.சுபாஷ்சந்திரபோஸ், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.நா. கலுசிவலிங்கம், ஊராட்சி மன்றத் தலைவர் து.பன்னீர்செல்வம், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

## தாம்பரம் மாநகராட்சியில் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடக்கம்

தாம்பரம், ஜூலை.20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சியில் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027'ன் (வீடு பட்டியல் மற்றும் வீட்டுகள் கணக்கெடுப்பு முதல் கட்டமான 'சுய கணக்கெடுப்பு' Self Enumeration பணி 2026 ஜூலை 17 அன்று தொடங்கியுள்ளதாக ஆணையரும் முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரியுமான எஸ். பாலச்சந்தர் (IAS) அறிவித்தார். மாநகராட்சிப் பகுதியில் இப்பணியை ஒருங்கிணைக்க 1,483 கணக்கெடுப்பாளர்கள் மற்றும் 243 மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஆகஸ்ட் 1 முதல் 30ஆம் தேதி வரை ஒவ்வொரு வீடு மற்றும் கட்டிடத்திற்கும் நேரில் சென்று விவரங்களைச் சேகரிப்பார்கள். இப்பணியைச் சுமூகமாக மேற்கொள்ள, 150 முதல் 200 வீடுகளைக் கொண்ட 'வீடு பட்டியல் தொகுதிகள்' (Houselisting Blocks) உருவாக்கப்பட்டுள்ளன; மாநகராட்சியில் மொத்தம் 1,483 அத்தகைய தொகுதிகள் உள்ளன. நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியமான இத்தகவல் சேகரிப்புப் பணிக்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். தவறான தகவல்களை அளிப்பது இப்பணியைத் தடுப்பதற்குச் சமமானதாகும்; இது தண்டனைக்குரிய குற்றமாகும். தவறான பதில்களை அளித்தல், அதிகாரிகளின் பணிக்கு இடையூறு விளைவித்தல், வீடுகளில் ஒட்டப்பட்ட குறியீடுகளை அகற்றுதல் மற்றும் அதிகாரப்பூர்வ கணக்கெடுப்புப் படிவத்தைப் பூர்த்தி செய்யாமல் இருத்தல் ஆகியவை குற்றங்களாகக் கருதப்படும். கணக்கெடுப்புப் பணிக்காகக் கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் நிலங்களை விடுவிக்குமாறு பிறப்பிக்கப்படும் உத்தரவுகளை மீறினால், ஓராண்டு வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இவை இரண்டும் விதிக்கப்படலாம் என்று ஆணையர் தெரிவித்தார். 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக, பொதுமக்கள் (ஜூலை 17, 2026) முதல் தங்கள் வீட்டு விவரங்களை தாங்களே பதிவு செய்துகொள்ளலாம். இந்த விவரங்களை ஜூலை 31, 2026 வரை இணையதளம் வாயிலாகச் சமர்ப்பிக்கலாம். https://se.census.gov.in என்ற இணையதளத்தின் மூலம், அலைபேசி அல்லது கணினியைப் பயன்படுத்தி விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். விவரங்களை வெற்றிகரமாகச் சமர்ப்பித்த பிறகு, 11 இலக்கக் குறியீடு (SE ID) ஒன்று குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் வாயிலாகப் பெறப்படும். இந்தக் குறியீட்டை, வீட்டிற்கு வருகை தரும் கணக்கெடுப்புப் பணியாளர்களிடம் தெரிவிக்க வேண்டும். இக்கணக்கெடுப்புப் பணிகள் இரண்டு கட்டங்களாக நடைபெறும். முதல் கட்டத்தில், வீடுகளின் பட்டியல் தயாரித்தல் மற்றும் வீடுகள் குறித்த கணக்கெடுப்பு ஆகியவை மேற்கொள்ளப்படும். தமிழ்நாட்டில் முதல் கட்டத் தரவு சேகரிப்புப் பணிகள் ஜூலை 17 முதல் 31 வரை நடைபெறும். மக்கள் தொகை கணக்கெடுப்பின் இரண்டாம் கட்டப் பணிகள் 2027ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நடைபெறும்.

## விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

மாதவரம், ஜூலை.20-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி சோலையம்மன் நகரில் உள்ள விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்கம் மற்றும் ராஜலட்சுமி இன்ஸ்டிடிட்யூட் ஆஃப் டெக்னாலஜி ஆகியோர் இணைந்து கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி பள்ளியின் தாளாளர் டாக்டர் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ஜெயலட்சுமி அனைவரையும் வரவேற்றார். பள்ளியின் முதல்வர் செல்வக்குமார், முதன்மை நிர்வாக அதிகாரி அருண்மொழிவர்மன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சியில் சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவர் எம்.முகம்மது அபுபக்கர் அறிமுக உரையாற்றினார்.பின்னர் சிறப்பு அழைப்பாளராக பிரபல கல்வியாளர் ஜெயபிரகாஷ்காந்தி



கலந்துகொண்டு மாணவ மாணவி களிடையே கல்வியின் முக்கியத்துவத்தையும், அதன் மூலம் வாழ்வில் எவ்வாறு முன்னேறுவது, அடுத்த ஐந்து ஆண்டுகளில் கல்வியில் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் எடுத்துரைத்து எந்தெந்த படிப்புகளுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன என்பதையும் நேர்த்தியாக எடுத்துரைத்தார்.

இதில் ராஜலட்சுமி இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி கார்த்திகேயன், சென்னை சோசியல் ஸ்டார்ஸ் லயன்ஸ் சங்க தலைவர் எஸ்.ரமேஷ், செயலாளர் எஸ்.கோபி, தமிழ்சிங்கம் லயன்ஸ் சங்க செயலாளர் டெக்கரேட்டர் பி.சேகர் உள்ளிட்ட மாணவமாணவிகள், ஆசிரியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.மேலும் 10, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் பல்வேறு பாடங்களில் மாணவ மாணவிகள் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற உழைத்த ஆசிரிய ஆசிரியைகளை பாராட்டி, பரிசுகள் வழங்கப்பட்டது.




■ திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏலகிரி மலையில், மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நடத்தும் ஏலகிரி கோடை விழாவில் 2026, நடைபெற்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் ஆர்.வீ.இரஞ்சித்குமார் (18.07.2026) அன்று பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் கே.சி.வீரமணி., ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன், வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பி.பாரூக், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ந.திருப்பதி, மற்றும் சுற்றுலாத்துறை அலுவலர்கள் வேளாண்துறை அலுவலர்கள் என அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்...

■ நீலகிரி மாவட்டத்தின் புதிய மாவட்ட வருவாய் அலுவலராக சு.வாசுகி பொறுப்பேற்றுக் கொண்டார்.



## மசினகுடியில் உள்ள கிராம சாலைகளில் வெளியூர் சுற்றுலா வாகனங்கள் சென்று வர முதல் தடை

நீலகிரி, ஜூலை.20-

நீலகிரி மாவட்டம் மசினகுடியில் உள்ள கிராம சாலைகளில் வெளியூர் சுற்றுலா வாகனங்கள் சென்று வர நாளை முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. மசினகுடி, மாயார், சிங்காரா, பொக்காபுரம் சாலைகளில் சுற்றுலா வாகனங்கள் செல்ல உயர்நீதிமன்றம் 2019ல் தடை விதித்தது

## பெரும்பாக்கம் ராஜசேகர்., எம். எல். ஏ சென்னை புறநகர் மாவட்ட பொறுப்பாளராக எடப்பாடி பழனிச்சாமி அறிவிப்பு

சென்னை, ஜூலை.20-

சென்னை புறநகர் மாவட்ட செயலாளர் பொறுப்புக்கு ஒருவர் நியமிக்கப்படும் வரை மாவட்ட கழகப் பணிகளை மேற்கொள்வதற்கு பொறுப்பாளராக கழக புரட்சித் தலைவி பேரவை துணைச் செயலாளர், பரங்கிமலை கிழக்கு ஒன்றிய செயலாளருமான.,பெரும்பாக்கம், ராஜசேகர், எம். எல். ஏ., (18.07.2026) அன்று முதல் நியமிக்கப்பட்டார். அ.தி.மு.க.வினர் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று அதிமுக பொதுச்செயலாளர், எடப்பாடி, கே. பழனிசாமி அறிக்கை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது .








Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161